சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS 123/2019**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 09.02.2026

Pw1 (ரோகிணி)

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதிகள் தரப்பில்)**

எனது பிறந்த தேதி 17.11.1998. என் தாயாரின் பெயர் தேவிகா. முத்துக்கிருஷ்ணனுக்கும் என் தாயாருக்கும் எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 24.11.1997 ல் நடந்தது. முத்துக்கிருஷ்ணனுக்கும் என் தாயாருக்கு எதிராக எந்த ஆண்டு விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தார் என்று தெரியாது. என்ன காரணத்திற்காக என் தாயார் மீது விவாகரத்து வழக்கு தொடரப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. விவாகரத்து வழக்கின் முடிவு என்ன ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, என் தயாரிடமும் நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. விவாகரத்து வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை. என் தாயார் தனக்காகவும் எனக்கும் சேர்த்து ஜீவனாம்சம் கோரி ஈரோடு முதன்மை சார்வு நீதிமன்றத்தில் வழகககு தாக்கல் செய்த விவரம் தெரியும். ஜீவனாம்ச வழக்கின் முடிவு என்ன ஆனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜீவனாம்ச வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயாருக்கு திருமணாவதற்கு முன்பாகவே 13.07.1996 ல் என் தாயாருக்கு நசியனுர் வீணா மருத்துவமனையில் ஒரு பெண் குழந்தை பிறந்தது இறந்த விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.02.09 16:35:55 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS